DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Tmt.M.Praveena, M.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 98/2019**

**(CNR.No: TNTH06-000160 -2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவா(குறு வட்ட அலுவலர், எரசக்கநாயக்கனூர், உத்தமபாளையம் தாலுக்கா) | Town | உத்தமபாளையம் |
| Father Name | : சிவனாண்டி | Taluk | : உத்தமபாளையம் |
| Age | : 35 | **DW4** | |

---

நாள் : 24.06.2026

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்தை நான் நேரில் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். சர்வே எண். 453/11,12, 453/13 ஆனது 1,2 பிரதிவாதிகள் ஆகிய ராசுத்தேவர் மற்றும் பழனிசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 453/40 ல் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் வடக்கு எல்லையும், அந்த வீட்டின் வடபுற சுவரும் ஒரே அத்தில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 453/39 ஆனது இன்றைய தேதியில் பொதுப்பாதையா என்றால் பொதுப்பாதை ஆகும். அது அரசு புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளது. சர்வே எண். 453/39 ல் சாக்கடை, ரோடு ஏதேனும் போடப்படுள்ளதா என்றால் சாக்கடை இல்லை. ஆனால் சிமெண்ட் ரோடு போடப்பட்டுள்ளது. சர்வேஎண். 453/39 ல் மேற்கு எல்லை சர்வே எண். 453/12 டன் முடிவடைகிறது என்றால் சரிதான்.

2) சர்வே எண். 453/12 க்கு தெற்கு பக்கத்தில் பாதை எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண பத்திரிக்கையில் சர்வே எண். 453/11 ஆனது வருவாய் கோட்டாச்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் விசாரணை செய்யப்பட்டு மேற்படி சர்வே எண் குறித்து 1,2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா பிராது மாதிரி வரைபடத்தை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை அளக்கும் போது நான் சர்வேயராக அந்த இடத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.3 ல் சர்வே

எண். 453/40ல் மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ள சந்துப்பாதை உள்ளதா என்றால் சர்வே எண். 453/40 முழுவதும் வீடாகத்தான் உள்ளதாக சாட்சி கூறுகிறார். எங்களது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை அடிப்படையில் தாவாவானது தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது.**

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

PRAVEENA

Digitally signed
by PRAVEENA
Date: 2026.06.24
18:02:05 +0300

District Munsif ,
Uthamapalayam.